# அபிவிருத்தி லொத்தர் சபை

## பகுதிநேர அறிவிப்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

அபிவிருத்தி லொத்தர் சபையினால் நடாத்தப்படும் லொத்தர் சீட்டிழுப்பு தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுவதற்கு (சிங்களம்/தமிழ்) இயலுமான பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள 30 வயதிற்குக் குறைந்த பகுதிநேர அறிவிப்பாளர்களிடமிருந்து (அனுபவம் வாய்ந்த/பயிலுநர்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- க.பொ.த (சா.த) பரீட்சையில் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பெண் அறிவிப்பாளர்கள் கண்கவர் தோற்றத்துடனும் ஆண் அறிவிப்பாளர்கள் சிறந்த ஆளுமையுடனும் இருத்தல் வேண்டும்.
- ஆண் அபேட்சகர்களின் உயரம் 5 அடி 6 அங்குலத்திற்கும் பெண் அறிவிப்பாளர்களின் உயரம் 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
- அறிவிப்பு கடமையின் போது எதிர்பார்க்கப்படும் மொழியை மிகவும் சரளமாக கையாளக் கூடியவராகவிருத்தல் வேண்டும்.
- க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் அறிவிப்பு செய்யக்கூடிய ஆற்றல் மற்றும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவு மேலதிக தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும்.
- லொத்தர் சீட்டிழுப்பு இரவு வேளையில் கொழும்பில் நடாத்தப்படுவதால் அதில் கலந்துகொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- அறிவிக்கும் ஆற்றலை அளவிட்டுப் பார்த்தும், நேர்முகத் தேர்வு மற்றும் திரை பரிசீலனைக்குப் பின்னரே பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுவார்.
- இது நிரந்தர அல்லது தற்காலிகப் பதவி இல்லை என்பதுடன், தேவையான வேளைகளில் அறிவிப்புக் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் பகுதிநேர அறிவிப்பாளர் அபிவிருத்தி லொத்தர் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.
- பெயர், பிறந்த திகதி, நிரந்தர வதிவிட முகவரி, கல்வித் தகைமைகள், அனுபவம் மற்றும் அறிவிப்பாளராகக் கடமையாற்றக்கூடிய மொழி மூலம், பாலினம், உயரம் போன்ற விடயங்களை உள்ளடக்கி உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட முழுமையான அஞ்சல் அட்டை அளவான வர்ண புகைப்படத்துடன் 2024-12-28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் அறிவிப்பாளராகக் கடமையாற்ற எதிர்பார்க்கும் மொழி மூலம் மற்றும் ‘‘பகுதிநேர அறிவிப்பாளரை ஆட்சேர்த்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்),**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு 02.**